# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



உறுப்பினர் செயலர்(பொறுப்பு), தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமம், தஞ்சாவூர்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:திருமதி.பு.கவிதா.**B.E., M.Plan.,**

ந.க.எண்: **1175/2017** தஉ திரு

நாள்: **1.2.2018**

பொருள்: தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் - புளியந்தோப்பு கிராமம் புல எண்கள்:**241/3E1Apt, 242pt 244**-ல் **8.30** ஏக்கர் (அல்லது) **361548.00** ச.அடி பரப்பளவில் அமையும் அஞ்சலையம்மாள் அவென்யூ நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் **(In Principle approval for the layout framework)** அளிப்பது தொடர்பாக.

பார்வை: 1. மனுதாரர் திரு.**A.**நரேந்திரன் என்பவரின் விண்ணப்பம் நாள்: 9.10.2017 மற்றும் 9.11.2017
2.அரசாணை எண்: **78** வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,**(UD4(3))** நாள்:**4.5.2017**
**3.**அரசாணை எண்: **172** வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,**(UD4(3))** நாள்:**13.10.2017**
4.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:**13193/2017/LA1** நாள்:3.11.2017

……

ஆணை:

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை 3-ல் கண்டுள்ள அரசாணையின் படியும், பார்வை 4-ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும், உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் அல்லது மனை உரிமையாளர் இணையதளத்தின் மூலம் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ருபாய்.**500**/- வீதம் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு ரூ.22500/- இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளதனை தொடர்ந்தும், உத்தேச மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து, மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./தஉ திகு எண்:**47**/வரன்முறை ம.பி.எண்:**46/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து வட்டார வளரச்சி அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

அ.வரன்முறைக்கட்டணம்:

அரசாணை விதி எண்.9(1)(**iii**)-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.30/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை அரசால் அறிவிக்கபபட்ட கீழ்க்கண்ட அரசுக்கணக்கில் செலுத்தவதை உறுதி செய்து கொள்ள வேண்டும் (உதாரணமாக, **223.04** ச.மீ பரப்பளவுள்ள மனை எண் 38—க்கான வரன்முறைக்கட்டணம் = **223.04 x 30 =** ரூ.**6691.2**/- ஆகும்).

**<u>Head of Account</u>:**

**0217-Urban Development**

**60 -OtherUrban Development Scheme**

**800 Other Receipts**

**AT Receipt under Regularisation charges of Unapproved layouts and plots -DTCP**

**(DPC: 0217-60-800-AT-0007).**

ஆ.வளர்ச்சிக் கட்டணம்:

அரசாணை எண்.10(e)-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.**25/-** என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து, வசூல் செய்து தொகையினை வட்டார வளர்ச்சி அலுவலர் தனியாக கணக்கு தொடங்கி அக்கணக்கில் செலுத்தப்பட்டதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். (உதாரணமாக, **223.04** ச.மீ பரப்பளவுள்ள மனை எண் 38–க்கான வளர்ச்சிக்கட்டணம் = **223.04 x25 =** ரூ.5576/- ஆகும்).

இ. திறவெளி ஒதுக்கீடு:

பார்வை 3-ல் கண்ட அரசாணையின் படி விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**i)** மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு: **361548.00** ச.அடி

**ii)** விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு: **111017.00** ச.அடி

**iii)** விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு தேவையான பூங்கா பரப்பு: **11101.70** ச.அடி

**iv)** ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பூங்கா **I, II** பரப்பு: **11141** ச.அடி **(10.03%)**

**v)** <u>மனைகள் விற்பனை செய்யப்பட்ட</u> விபரம்:

மனை எண்கள்: **31 to 38, 45 to 61, 63 to 82, 84 to 86, 89 to 101, 103 to 106, 111,114 = 69 Nos.**

**<u>II.நிபந்தனைகள்</u>:**

1.இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும், வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின் படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின் படி மனைப்பிரிவு சாலைகள்,மூலை முடுக்கு மற்றும் பூங்கா/திறவிடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் **(O.S.R.)** இவைகளை தன்னிச்சையாக உள்ளாட்சியின் உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டு விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

12. பார்வை 4-ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சார்பதிவாளர், பதிவுத்துறை, வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து பத்திரப்பதிவு மற்றும் உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | **361548.00** ச.அடி | -- |
| ஒதுக்கிய மனைகள் | 114 | -- |
| பூங்கா **I, II** | **11141** ச.அடி | **10.03%** |

உறுப்பினர் செயலர்(பொறுப்பு),
தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமம்.

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
தஞ்சாவூர் } இரண்டு வரைபட தொகுப்புகள்.

நகல்:
1. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
தஞ்சாவூர். } ஒரு வரைபட தொகுப்பு

2. உதவி இயக்குனர்,
நில அளவை பதிவேடு துறை
மாவட்ட ஆட்சியரகம்
தஞ்சாவூர். } ஒரு வரைபட தொகுப்பு

3. வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் வட்டம்
தஞ்சாவூர் } ஒரு வரைபட தொகுப்பு

4. உதவி இயக்குநர் (கி.ஊ)
புதிய மாவட்ட ஆட்சியர்
அலுவலகம்
தஞ்சாவூர். } ஒரு வரைபட தொகுப்பு

5. தொழில் நுட்ப வைப்பறை - ஒரு வரைபட தொகுப்பு

நகல்:
திரு.A.நரேந்திரன்
எண்:19டி, 5வது குறுக்கு தெரு,
அருளானந்த நகர்,
தஞ்சாவூர்.

அலுவலக முகவரி
உறுப்பினர் செயலர்,
தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
எண்.33,ராஜப்பா நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:- **tanjorelpa@yahoo.com**

3. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக்கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம், மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பபட வேண்டும்.

4.இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

5.நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

6. விதி எண்:16-ன் படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத்திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக்கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

7.மனைப்பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள மூலை முடுக்கு நிலப்பரப்பினை சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர் மனை வரன்முறைப்படுத்தக் கோரும் போது, மனை உரிமையாளரிடம் இருந்து உள்ளாட்சிக்குத் தானமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8.அரசாணை விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

9. கூராய்வு கட்டணம், வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இவைகளை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனிமனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும்.தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

10.பார்வை 4-ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதிகள் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், பதிவுத்துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

11.பார்வை 4-ல் தெரிவிக்கப்பட்டவாறு சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை அவர்கள் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் - மாரியம்மன்கோவில் ஊராட்சி, புல எண்கள். 241/3E1Apt,242pt,244 - அஞ்சலை அம்மாள் அவென்யூ பகுதியில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு

ந.க.எண் 41/2017/ஆ2 நாள் . 21.06.2018

**கட்டணம் செலுத்தப்பட்ட விபரங்கள்**

**1. கூராய்வு கட்டணம் :**

1. 43 மனைகளுக்கான கட்டணத்தொகை - ரூ.22000/-

பதிவு எண்.DTCP/L/0026122/2017, Transaction No-JHMP5801489208, நாள் - 09.11.2017.
ரூ.500/- பதிவுஎண்.DTCP/P/0016131/2017, Transaction No-JHMP5720835418
நாள் - 09.10.2017.. www.layout reg.tn.in –ல் செலுத்தப்பட்டுள்ளது.

**2.வரன்முறை கட்டணம் :**

ரூ.296780/- அரசுக்கணக்கு தலைப்பு 021760800AT0007-ல், நாள்- 01.03.2018-ல் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது.

**3. வளர்ச்சிக் கட்டணம் :**

ரூ.247320/- மாரியம்மன்கோவில் ஊராட்சிக்காக மாவட்ட ஆட்சியரின் கணக்கு எண்.378401000000322- தஞ்சாவூர் IOB வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது, நாள் - 01.03.2018

4. உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி), தஞ்சாவூர் அவர்களின் கடித நாள் - 08.06.2018.

உறுப்பினர் செயலர் (பொ) தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம், அவர்களின் கடித ந.க.எண்.1175/ 2017/தஉதிகு, நாள் 01.02.2018-ன் படி ம.வ/த.உ.தி.கு.எண்.47/2018, வரன்முறை எண் 46/2018-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாரியம்மன்கோவில் ஊராட்சி, அஞ்சலை அம்மாள் அவென்யூ **மனை எண்கள். 1-11,14-30,39-44,62,83,87,88,102,107-109,112** - ஆகிய 43 மனைகளை வரன்முறை செய்து கொள்ளும் பொருட்டு அரசாணை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வசதி துறை நாள் - 04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வசதி துறை நாள் - 13.10.2017-ன் படி தஞ்சாவூர் உறுப்பினர் செயலர் (பொ) தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது

தனி அலுவலர்/ மாரியம்மன்கோவில் ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
தஞ்சாவூர்

**பெறுதல்**
திரு.N.நரேந்திரன்,
எண்.194, 5வது குறுக்குத்தெரு,
அருளானந்த நகர், தஞ்சாவூர்..

**நகல்** - ஊராட்சி செயலர், மாரியம்மன்கோவில் ஊராட்சி (ஊராட்சி மனைப்பிரிவு அனுமதிப்பதிவேட்டில் பதிந்து தீர்மானம் ஏற்றி அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.)

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate